4. அறிவிப்பு.

மாற்றுத் தலைவர்கள் பட்டியல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 9-ன் கீழ், கீழ்க்கண்டவர்களை மாற்றுத் தலைவர்களாக நியமிக்கிறேன்.

திருவாளர்கள்—

சி. கோபால்

எம்.எஸ். மாணிக்கம்

கு.பா. பழனியப்பன்

இ.எஸ்.எம். பக்கீர் முகமது

ரா. கிருஷ்ணன்.

5. கவன ஈர்ப்பு.

சென்னை பல்கலைக் கழகம் நடத்தும் செமஸ்டர் தேர்வு முறை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருவாளர்கள் அ. ரகுமான்கான், என். பழனிவேல் ஆகியோர் ஒரே பொருள் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானங்கள் கொடுத்துள்ளனர். அவர்களுள் ஒருவர் இதை மாண்புமிகு கல்வியமைச்சரின் கவனத்திற்குக் கொண்டுவருவார்.

திரு. என். பழனிவேல் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, ''சென்னைப் பல்கலைக் கழகம் 5-ஆவது செமஸ்டர் தேர்வு முடிவினை அறிவிக்காமல், 6-வது செமஸ்டர் தேர்வை அறிவித்திருப்பதால் மாணவர்களிடையே நிலவும் கவலை குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு கல்வி அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : பேரவை முன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

அறிக்கை.

சென்னைப் பல்கலைக்கழகம் 6-வது செமஸ்டர் தேர்வு முடிவுகளை அறிவித்து 5-வது செமஸ்டர் தேர்வு முடிவுகள் அறிவிக்கப்படாமல் இல்லை. 5-வது செமஸ்டர் தேர்வு முடிவு 14—6—1982-லும், 6-வது செமஸ்டர் முடிவு 24—7—1982-லும் அறிவிக்கப்பட்டன. ஆனால் கடந்த ஆண்டு நடந்த 5-வது செமஸ்டர் தேர்வுகளின் முடிவுகளை அறிவிப்பதில் சில

[திரு. செ. அரங்கநாயகம்] [1983 மார்ச் 8

தவிர்க்க முடியாத காரணங்களால் கால தாமதம் ஏற்பட்டது. இதன் காரணமாக முடிவுகள் அறிவிப்பதற்கு முன்னதாக 6-வது செமஸ்டர் தேர்வுகள் நடத்த வேண்டியிருந்ததால், அதற்கான ஏற்பாடுகளைப் பல்கலைக்கழகம் செய்தது. இந்த நிலையில் 5-வது செமஸ்டர் எழுதிய மாணவர்கள் இந்தத் தேர்வுகளின் முடிவுகளை அறிவிக்காமல் 6 (ஆறாவது) செமஸ்டர் தேர்வுகள் நடத்தினால், ஏதாவது ஒரு சில பாடங்களில் தேர்ச்சி பெறாமல் இருந்தால் அப்பாடங்களில் மீண்டும் தேர்வு எழுத இயலாது என்று அறிவித்ததின்பேரில், சென்னைப் பல்கலைக்கழக மாணவர்கள் யாராவது தாங்கள் எழுதிய 5-வது செமஸ்டர் தேர்வில் ஏதாவது பாடத்தில் தான் தேர்ச்சி பெற இயலாது என்று எண்ணினால், தேர்வு முடிவுகள் தெரிவிக்கப்படவில்லை என்றாலும் கூட அந்தப் பாடங்களில் அபிவிருத்தித் தேர்வு (Improvement Test) எழுதலாம் என்று அறிவிக்கப்பட்டது. ஆனால், இந்த வாய்ப்பினை மாணவர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. இதன் காரணமாக 5-வது செமஸ்டரில் ஒரு சில பாடங்களில் தேர்வு பெறாமல் 6-வது செமஸ்டரில் எல்லா பாடங்களிலும் தேர்ச்சி பெற்றிருந்தாலும், மேற்கொண்டு படிப்பினைத் தொடர்வதோ அல்லது வேலை வாய்ப்பினை தேடிச் செல்வதோ ஒரு சிலருக்கு இயலாமல் இருந்தது. தேர்ச்சி பெறாமல் இருந்த இந்த மாணவர்களுக்கும், 1982 ஆகஸ்ட் மாதம் தனியாக ஒரு தேர்வு சென்னைப் பல்கலைக்கழகம் நடத்தியது. இதன் முடிவு 31—1—1983 அன்று அறிவிக்கப்பட்டு கல்லூரிகளுக்கு அனுப்பப்பட்டது. ஆகவே, 5-வது செமஸ்டரில் எல்லாப் பாடங்களிலும் தேர்வுபெற்று, மீண்டும் 6-வது செமஸ்டரில் தேர்வு எழுதியவர்கள் எந்தவிதத்திலும் பாதிக்கப்படவில்லை. ஆனால் யார் யார் 5-வது செமஸ்டரில் ஒரு சில பாடங்களில் தேர்வு பெறவில்லையோ அவர்கள் மட்டுமே பாதிக்கப்பட்டார்கள்.

சென்னைப் பல்கலைக்கழகம் குறித்த காலத்தில், தேர்வு நடத்தி, தேர்வு முடிவுகளை அறிவிப்பதற்குத் தக்க முயற்சி எடுத்து வருகிறது.

திரு. என். பழனிவேல் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இந்த விவர அறிக்கையில் தற்போது 31-1-1983 ஆம் தேதி அந்த தேர்வு முடிவுகள் எல்லாம் அறிவிக்கப்பட்டு விட்டதாக சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் மாணவர்கள் கடந்த ஓராண்டு காலமாக அந்த தேர்வு முடிவுகள் அறிவிக்கப்படவில்லை. ஆகவே நாங்கள் போராடப் போகிறோம் என்று சொல்லி சமீபத்தில் ஜனவரி மாதம் எங்களிடத்திலே மனுக்களைக் கொடுத்து இங்கே வந்து தங்கி இருந்தார்கள். அதன் பிறகு இந்த தீர்மானத்தைக் கொடுத்த பிறகு தான் அந்த ரிசல்டை வெளியிட்டிருக்கிறார்கள். அப்போது இதிலே சொல்லி

யிருக்கிறார்கள், தவிர்க்கமுடியாத காரணத்தால் அந்த 5-ஆவது செமஸ்டர் தேர்வு முடிவு வெளியிடுவதில் காலதாமதம் ஏற்பட்டது என்று. அது தவிர்க்கமுடியாது என்று சொன்னால் என்ன என்பதை இங்கே அறிவிக்கவேண்டும். அத்தோடு இந்த செமஸ்டர் நான் செமஸ்டர் என்ற கொள்கைகளை சென்னைப் பல்கலைக்கழகம் அனுஷ்டிப்பதால் மாணவர்களுக்கு பெரும் சிரமங்கள் ஏற்படுவதாக சொல்கிறார்கள். என்னவென்று சொன்னால்..................

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இரண்டு கேள்விகள் கேட்கலாம். விளக்கம் கொடுத்துக் கொண்டு இருக்காதீர்கள்.

திரு. என். பழனிவேல் : மூன்று ஆண்டு பட்டப் படிப்பை படிக்கக் கூடிய அந்த மாணவர்களுடைய படிப்பில் செமஸ்டர் நான் செமஸ்டர் என்று இருப்பதால் அவர்களுக்கு சிரமம் ஏற்படுகிறது. ஆகவே செமஸ்டர் முறை தான் அவர்களுக்கு இலகுவாக இருப்பதாகச் சொல்லுகின்றார்கள். மதுரைப் பல்கலைக்கழகத்திலே அப்படித்தான் நடத்துவதாகச் சொல்கிறார்கள். ஆகவே அம்மாதிரி செமஸ்டர் முறை அனுஷ்டிப்பதற்கு அரசு உத்தரவிடுமா?

(முற்பகல் 10-40)

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செமஸ்டர் முறை வேண்டுமா, வேண்டாமா என்கிற பிரச்னை எல்லாம் கவனிக்கவேண்டியது பல்கலைக்கழகம். இதிலே அரசு தலையிடமுடியாது. ஆனால் இப்போது மாணவர்கள் சார்பாக கொண்டு வரப்பட்டுள்ள கவன ஈர்ப்புத் தீர்மானத்தின் அடிப்படையிலே சில விவரங்களை நாம் தந்திருக்கிறோம். இது மாணவர்களை பாதிக்கக்கூடியது என்ற அடிப்படையிலே இனிமேல் இத்தகைய முடிவுகளின் தாமதம் ஏற்படக்கூடாது என்று அரசு தன்னுடைய கருத்தை பல்கலைக்கழகத்திற்கு தெரிவித்து இருக்கிறது. அவர்களும் இதற்கான நடவடிக்கைகளில் ஈடுபட்டிருக்கிறார்கள். இதிலே ஐந்தாவது செமஸ்டரின் தேர்வு முடிவுகளை வெளியிடாத காரணத்தால் ஆறாவது செமஸ்டர் தேர்வுகளை எழுதுகின்ற நேரத்திலே யார் எழுதுவது, பெயில் ஆனவர்கள் தான் எழுத வேண்டும். அப்படி அவர்கள் பெயில் ஆனோமா இல்லையா என்று தெரியாத நேரத்திலே இப்படிப்பட்ட ஒரு குழப்பமான நிலை இருந்தது. ஆனால் மாணவர்கள் பாதிக்கப்படாத வகையிலே அந்த மாணவர்களுக்கு தனியாக ஒரு தேர்வு வைத்து அதனுடைய முடிவுகளை வெளியிட்டு இருக்கிறார்கள். இதிலே மேற்கொண்டு ஏற்படும் தாமதங்களைத் தவிர்ப்பதற்கான நடவடிக்கைகளில் பல்கலைக்கழகம் ஈடுபட்டிருக்கிறது.

திரு. என். பழனிவேல் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த தாமதங்களைத் தவிர்ப்பதற்கான நடவடிக்கைகளை அரசு எடுத்துவருகிறது என்று சொன்னார்கள். நன்றி. இன்றைக்கு இந்த சென்னைப் பல்கலைக் கழகம் மாணவர்கள்

கட்டணங்களை வசூலிப்பதில் திடிரென்று அதிகரித்து இருப்பதாகச் சொல்கிறார்கள். அதோடு கம்பூட்டர் மூலமாக மார்க் லிஸ்ட்டு தருகிறோம் என்று 3 ரூபாய் வசூலித்துவிட்டு அவர்களுக்கு கையாலேயே மார்க் லிஸ்ட் கொடுப்பதாகச் சொல்கிறார்கள். இது அரசுக்குத் தெரியுமா? அப்படியானால் இப்படி வசூலிப்பதை நிறுவத்துவதற்கு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறியவிரும்புகிறேன். ஏற்கனவே ஒரு பேப்பருக்கு 8 ரூபாய் என்று வாங்கிக்கொண்டு இருப்பது தற்போது 12 ரூபாய் என்று அதிகரித்து இருப்பதாகச் சொல்கிறார்கள். அதையும் குறைப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்படுகிற செலவுகளை வைத்து அவர்கள் சில முடிவுகளை செய்கிறார்கள். ஆகவே அப்படி அவர்கள் அதிகமாக உயர்த்துவதாக இருந்தால் அதை அரசுக்குச் சொல்லி பரிசீலிக்கச் சொல்லும். அந்த அடிப்படையிலே தான் நாம் பிரச்னைகளைக் கவனிக்கவேண்டும். அதோடு இப்போது கொடுக்கப்பட்டிருக்கும் கவன ஈர்ப்புக்கும் இதற்கும் சம்பந்தம் இல்லை.

6. வரவு—செலவுத் திட்டம் 1983–84 பொது விவாதம்.

*திரு. துரைமுருகன் : பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் இந்த மாமன்றத்தில் 1983–84ஆம் ஆண்டுக்கான நிதி நிலை அறிக்கையை வைத்திருக்கிறார்கள். நான் சார்ந்திருக்கிற திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் சில கருத்துக்களை எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை.)

1971 ஆம் ஆண்டிலேயிருந்து இந்த மாமன்றத்திலே நிதிநிலை அறிக்கையை படிக்கிற வாய்ப்பை நான் பெற்றிருக்கிறேன். ஆனால் இப்படிப்பட்ட நிதி நிலை அறிக்கையை நான் பார்த்ததில்லை என்று நான் சொல்வதற்கு வருத்தப்படுகிறேன். இதைப்போல ஒரு மோசமான நிதிநிலை அறிக்கையை நான் படித்ததே இல்லை. வந்த நிதி நிலை அறிக்கையிலே இது ஒரு திருஷ்டிபரிகாரமாக இருக்கிறது என்பது என்னுடைய முதல் குற்றச்சாட்டு, எந்த விதமான செயல் திட்டமும், ஒரு ஸ்டேட் வெல்பேர் ஸ்டேட்டாக ஆக்கவேண்டுமென்ற கொள்கை எதுவும் இதிலே காணப்படவில்லை. நம்முடைய நாவலர் அவர்கள் என்னைக் கேட்கலாம். என்னை ஏன் துளைத்து எடுக்கிறாய். கொள்கை இருந்தால் தானே அதை நான் சுட்டிக்காட்ட முடியும் என்று என்னைக் கேட்கலாம். பதில் அதுவாக இருக்குமானால் நான் அதற்காக அவரைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். நிதி நிலை அறிக்கை என்று சொல்லுவது ஒரு மாநிலத்தினுடைய வரவு செலவுத் திட்டத்தை மட்டும் காட்டுகிற வட்டிக்கடை புத்தகம் அல்ல.